# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 267/மா/2022**

**நாள் : 23.01.2023**

திரு. K. ராமு,
சேலம் - 636 307. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்
சேலம் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் போஸ்ட், குடுமியாந்தெரு, எண்.24/5-2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. ராமு என்பவரின் 20.12.2022 நாளிட்ட மனு 21.12.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 267/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் போஸ்ட், குடுமியாந்தெரு, எண்.24/5-2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. ராமு என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

"மேற்கண்ட எனது முகவரியில் அடுத்த வீட்டு உரிமையாளர் பெயர் ராமாயி குடுமியாந் தெரு, சிவதாபுரம், சேலம் மாநகராட்சி என்பவர் செப்டிக் டேங்க் கட்டாமல் கழிவு நீரை நேரடியாக நிலத்தில் விடுகிறார்கள். நேரடியாக நிலத்தில் விடுவதால் நிலத்தடி நீர் மாசுபாடு சுற்றுச்சூழல் கேடு ஆகியவை ஏற்படுகிறது. மாநகராட்சி விதிப்படி செப்டிக் டேங்க் கட்டி நிரம்பியவுடன் லாரி மூலம் வெளியே எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். இது குறித்து நான் கடந்த 17.03.2021ல் மாநகராட்சியில் புகார் அளித்தேன். சம்பவ இடத்திற்கு இதனை ஆய்வு செய்ய வந்த SI பிரகாஷ் வீட்டு உரிமையாளரிடம் ரூ.10,000/- லஞ்சம் பெற்றுக் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சென்றுவிட்டார். இது குறித்து கடந்த 20.07.2021ல் CM தனிப்பிரிவிலும் புகார் அளித்துள்ளேன். ஆகையால் SI பிரகாஷ் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 13.01.2023 நாளிட்ட அறிக்கையில்,**

"சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண்.22ல், திரு. K. ராமு, த/பெ. கருப்பண்ணன், 24/5-2, குடுமியான் தெரு, சேலம்-636 307

என்பவர், தமது வீட்டுக்கு அடுத்த வீட்டின் உரிமையாளர், திருமதி. ராமாயி என்பவர், செப்டிக் டேங்க் கட்டாமல் கழிவு நீரை நேரடியாக நிலத்தில் விடுவதால் நிலத்தடி நீர் மாசுபாடு, சுற்றுச்சூழல் கேடு ஆகியவை ஏற்படுகின்றது என புகார் மனு சமர்ப்பித்துள்ளதின் பேரில், இவ்வலுவலக 22வது கோட்டம் சுகாதார ஆய்வாளரால் (திரு. க. பிரகாஷ்) மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டு, மேற்படி கழிவுநீர் நச்சுத் தொட்டி கட்டுமானம் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும், மேலும் அக்கம் பக்கத்து வீட்டில் வசிப்பவர்களிடம் விசாரித்த போது, கழிவுநீர் நச்சுத்தொட்டி கட்டப்படும் போது நான்கு புறம் மற்றும் அடித்தளம் பூசப்பட்டதாக தகவல் தெரிவித்தனர். மேலும், வெளிச்சாக்கடையில், எவ்வித மனிதக் கழிவுகளும் வெளியே வருவதில்லை என தெரிவித்தனர், எனவே, தொட்டி நிரம்பியதும் கழிவு நீர் வாகன உதவியுடன் அவ்வப்போது உரிய பாதுகாப்பு முறையுடன் கழிவுநீர் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும் என சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளரிடம் அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்கண்ட விசாரணையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஒரே குடும்ப வகையறா சேர்ந்தவர்கள் என்றும், குடும்பச் சண்டை காரணமாக ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி புகார் மனு அளித்து வருவதாகவும் அக்கம் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரர்கள் தகவல் தெரிவிக்கின்றனர் எனவும், நேராய்வு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி புகார் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை இவ்வலுவலக அறிவிப்பு பதிவு அஞ்சல் மூலம் மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, ஒப்புகை சீட்டும் பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பொருள் தொடர்பாக, புகார்தாரர் திரு. க. ராமு, த/பெ. கருப்பண்ணன் என்பவர், மாண்புமிகு முதலமைச்சர் தனி பிரிவிற்கும் மின்னஞ்சல் மூலம் புகார் சமர்ப்பிக்கப்பட்டத்தின் பேரில், இவ்வலுவலகம் மின்னஞ்சல் மூலம் பதில் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி திரு. க. ராமு, த/பெ. கருப்பண்ணன், சேலம்-307, என்பவர் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை, அவர்களுக்கு முகவரியிட்டு வரப்பெற்ற மனுவின் மீது, மாண்பமை ஆணையத்திற்கு உண்மை தன்மையை மெய்ப்பிப்பதற்காகவும், புகார் மனுதாரர் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காகவும், இவ்வலுவலக கோட்டம் எண்.22-ன் சுகாதார ஆய்வாளர் (திரு. கே. பிரகாஷ்) மீண்டும் மேற்படி இடத்தினை நேராய்வு செய்து, கழிவு நீர் நச்சுத் தொட்டியின் ஒரு சிலாப் கல் அகற்றப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் கழிவுநீர் நச்சுத் தொட்டி பூசு வேலை செய்யப்பட்டுள்ளது எனவும், கழிவுநீர் தேக்க நிலையில் வெளிப்புறம் கசிவு இல்லாமல் மக்கும் நிலையில் இருப்பதை உறுதி செய்யப்பட்டது. அதன் பின் கழிவுநீர் சிலாப் மீண்டும் பாதுகாப்பான முறையில் விபத்து ஏதும் நடக்காத வகையில் மூடி வைக்கப்பட்டது எனவும் நேராய்வு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, சம்மந்தப்பட்ட வீட்டின் உரிமையாளரிடம் நிலத்தடி நீர் மாசு படாமல் இருப்பது பற்றி விவரம் தெரிவிக்கப்பட்டு கழிவுநீர் நச்சுத்தொட்டி நிரம்பியவுடன் உரிய முறையில், கழிவுநீர் அகற்றும் வாகனத்தின் மூலம் அப்புறப்படுத்த வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் – 1939ம் வருட பொது சுகாதார சட்டப் பிரிவுகளின் படி மாநகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை எச்சரித்து மீண்டும் உறுதிமொழி கடிதம் மற்றும் குடியிருப்பு பகுதிக்கான ஆதார் அட்டை, குடும்ப அட்டை ஆவணங்களும் பெறப்பட்டுள்ளது.

எனவே, சுகாதார ஆய்வாளர் அவர்களால் அலுவலக நடைமுறைகளுக்குட்பட்டும், பொது சுகாதார விதிகளின்படியுமே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் தனது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், விதிமீறல்கள் ஏதும் இல்லையாதலால், மேற்படி புகார் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை பரிசீலித்து, நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் எனவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் நாள் 18.01.2023 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

18.01.2023 அன்று நடந்த விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.

**18.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் சேலம் மாநகராட்சியின் சுகாதார ஆய்வாளர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் தனது அண்டை வீட்டில் வசிக்கும் உறவினர்களுடன் ஏற்பட்டுள்ள குடும்ப சண்டையின் காரணமாக இத்தகைய புகார் மனுக்களை அனுப்பிவருகிறார். எனினும் மனுதாரர் தனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் திருமதி ராமாயி என்பவர் செப்டிக்டேங்க் கட்டாமல் கழிவு நீரை நேரடியாக நிலத்தில் விடுவதாக அளித்துள்ள புகாரையொட்டி, அங்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட கழிவுநீர் தொட்டி ஆய்வு செய்ததில் தொட்டியின் உள்ளே பூசு வேலை செய்யப்பட்டுள்ளது. மேலும் அத்தொட்டியில் கழிவு நீர் தேக்க நிலையில் வெளிப்புறம் கசிவு இல்லாமல் உள்ளது என உறுதிசெய்யப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து இது தொடர்பான புகைப்படங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் சேலம் மாநகராட்சி ஆணையரின் 13.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரரின் மனு, சேலம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் தன்னுடைய அடுத்த வீட்டு உரிமையாளர் செப்டிக் டேங்க் கட்டாமல் கழிவு நீரை நேரடியாக நிலத்தில் விடுவதாகவும், அதனால் நிலத்தடி நீர் மாசு ஏற்படுவதாகவும் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட பக்கத்து வீட்டு உரிமையாளர் கழிவுநீர் தொட்டி கட்டுமானம் 4 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, நான்கு புறமும் மற்றும் அடித்தளம் பூசப்பட்டதாகவும், வெளிச் சாக்கடையில் எவ்வித மனிதக் கழிவுகளும் வெளியேறுவது இல்லையெனவும், கழிவுநீர் தொட்டி ஆய்வு செய்யப்பட்டு மீண்டும் பாதுகாப்பாக மூடப்பட்டது என்பதும் மனுதாரர் குடும்பச் சண்டை காரணமாக அடுத்த வீட்டு உரிமையாளர் மீது குற்றம் சாட்டி புகார் மனு அளித்துள்ளதாக அருகில் வசிப்பவர்கள் தெரிவித்து இருப்பதாகவும், சுகாதார விதிகளின்படியே நடவடிக்கை எடுத்து இருப்பதாகவும் சேலம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் சேலம் சுகாதார ஆய்வாளர் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலமும் மற்றும் புகைப்பட நகல்களின் மூலமும் அறிய முடிகிறது.

**விசாரணைக்குப்பின் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:-**

மனுதாரர் புகார் மனு அளித்தவுடன், சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், கள ஆய்வாளரால், மனுவில் தெரிவித்த புகாரினை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து வீட்டு உரிமையாளருக்கு கழிவுநீர் அகற்றுவது குறித்து விளக்கம் கேட்டு அன்னாரிடமிருந்து இருந்து உரிய வாக்குமூலம் பெறப்பட்டது வரவேற்கத்தக்கது ஆகும். எனினும், சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலத்தில் உள்ள வீடுகளில் முறையாக கழிவுநீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளனவா என்றும், அவற்றில் இருந்து கழிவுகள் நிலத்தடி நீரில் கலக்காமல் இருப்பதையும், அவ்வப்போது கள ஆய்வு செய்து, உறுதி செய்யுமாறு சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. வீட்டு உரிமையாளர்கள் அவ்விதம் பாதுகாப்பான முறையில் கழிவுநீர் தொட்டி கட்டாமல் இருந்தால், அவர்களின் மீது பொது

சுகாதார சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கமாறும், சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

மனுதாரர் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புகை இம்முறைமன்றத்திலும் பெறப்பட்ட நிலையிலும், விசாரணை தேதி குறித்து தகவல் தெரிவிக்க தொலைபேசியில் தொடர்பு கொண்டபொழுதும், தொலைப்பேசி அழைப்பை ஏற்காமல் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்தது மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும், மனுதாரர் தன்னுடைய மனுவில் எதிர்மனுதாரர் மீது கையூட்டும் புகார் தெரிவித்து, விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்தது உள்நோக்கம் கொண்டதாக உள்ளது என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. எதிர்மனுதாரரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றை பார்க்கும்போது மனுதாரர் பக்கத்து வீட்டு உரிமையாளர் மீது தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக இம்முறைமன்றத்திற்கு புகார் மனு அளித்து இருப்பதாக இம்முறைமன்றம் கருதுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014ன் கீழ் இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்த்தை வழங்கியுள்ள நிலையில், மனுதாரரின் செயல் இம்முறைமன்றத்தின் நேரத்தை வீணடித்தது மட்டுமல்லாமல், இம்முறைமன்றத்தை மதிக்காத செயலாக கருதி, மனுதாரரால் இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்படும் புகார் மனுக்கள் மீது இனி ஒரு வருடகாலத்திற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. K. ராமு,
   S/o. கருப்பண்ணன்,
   24/5-2, குடுமியாந் தெரு,
   சிவதாபுரம் போஸ்ட், சேலம் - 636 307.
2. உதவி ஆணையர்,
   சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
   சேலம் மாநகராட்சி,
   சேலம் - 636 001.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

24/01/23

செயலாளர்.

24/1/23